# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

<u>முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறைத் தீர்ப்பாளர்</u>

<u>மேல்முறையீட்டு மனு எண். 47 / 2012</u>

திருமதி. வி. சரஸ்வதிஅம்மாள்,
க/பெ வீரபாகு செட்டியார்,
எண்.80, மீனாட்சி பவனம்,
அன்னதான விநாயகர் கோயில் தெரு,
பேட்டை, திருநெல்வேலி – 4.

... மேல்முறையீட்டாளர்
( திரு. ஆவுடையப்பன்.
மேல்முறையீட்டாளருக்காக)

எதிர்

மேற்பார்வைப் பொறியாளர்
திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
மகராஜ நகர்,
திருநெல்வேலி – 11.

... எதிர்மனுதாரர்
( திரு. ஏ. பி. சேகர் / செயற்
பொறியாளர்/இ&ப/நகரம்.
எதிர்மனுதாரருக்காக )

**<u>கேட்புரை நாள் : 6–12–2012</u>**
**<u>ஆணை நாள் : 18–01–2013</u>**

திருமதி. வி. சரஸ்வதி அம்மாள், பேட்டை, திருநெல்வேலி – 4 அவர்களின் 20.10.2012 நாளிட்ட மனுவானது மேல்முறையீட்டு மனு எண். 47/2012 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கூறிய மேல்முறையீட்டு மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 6.12.2012 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனு, எதிர்மனுதாரரின் பதிலுரை, இருதரப்பினராலும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் கேட்புரை நாளில் இரு தரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல் முறையீட்டளாரின் வேண்டுகோள் :

மேல்முறையீட்டாளர் தனக்கு பாத்தியப்பட்ட இடத்தின் வழியாக புதிய மின்னிணைப்பு எண்.009–002–546 செல்லும் மின் கம்பிகள் மற்றும் மின் வயர்களை துண்டிப்பு செய்ய ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

### 2. வழக்கின் சுருக்க விவரம் :

திருமதி. கோமதி அம்மாள் அவர்களுக்கு மின்னிணைப்பு வழங்குவதற்கு மேல்முறையீட்டாளர் ஆட்சேபனை தெரிவித்தும் அவர் தாக்கல் செய்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் பொழுது இளநிலை மின்பொறியாளர் திரு. லெட்சுமணப்பெருமாள் அவர்கள் மேல்முறையீட்டாளருக்கு பாத்தியப்பட்ட இடத்தின் வழியாக மின் கம்பிகள் மற்றும் மின் வயர்கள் கொண்டு சென்று 26.9.2005 அன்று புதிய மின்னிணைப்பு வழங்கியுள்ளதாக தெரிவித்து அந்த மின்னிணைப்பிற்கு செல்லும் மின்கம்பிகள் மற்றும் மின் வயர்களைத் துண்டிக்க வேண்டும் என்ற கேட்டுள்ளார். மின்னிணைப்பு வழங்கப்பட்ட தேதி 26.9.2005 திருநெல்வேலி மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 19.6.2012 அன்று சமர்ப்பிக்கப்பட்ட மனுவிற்கு நேரடி விசாரணை 5.7.2012 என்று அறிவிக்கப்பட்டு இருந்ததாகவும், மனுதாரர் உடல்நலம் சரியில்லாததால் கலந்து கொள்ள முடியவில்லை என்று தெரிவித்துள்ளதாகவும், அதன்பிறகு குறைதீர்க்கும் மன்றத்திடம் இருந்து எந்த தகவலும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அவர் மேற்கண்ட தகவல்களை தெரிவித்து 20.10.2012 அன்று ஒரு மேல்முறையீட்டு புகார் மனுவை மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பித்திருந்தார். அவர் மின் நுகர்வோர் மன்றத்திற்கு மனு செய்த 19.6.2012 லிருந்து 60 நாட்களுக்கு மேல்

ஆகிவிட்டதால் மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்பித்து உள்ள அந்த மனு மேல்முறையீட்டு மனுவாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u> :**

மேல்முறையீட்டாளர், தன்னுடைய 20.10.2012 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவிலும், மற்றும் 25.11.2012 தேதியிட்ட புகார் மனுவிலும் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார் :

அ. திருநெல்வேலி மேற்பார்வை மின் பொறியாளர் (தலைவர்) மின்குறை தீர்க்கும் மன்றம் தினமலர் நாளிதழ் அறிவிப்பு 26.11.2011 அறிவிப்பு செய்தியில் மின்வாரிய குறைகளை 12.12.2011க்குள் அனுப்ப அறிவிப்பு செய்தார்கள். அதன் அடிப்படையில் புகார் மனு மனுதாரராகிய அவரால் விரைவு தபால் ஒப்புதல் அட்டையுடன் அனுப்பப்பட்டது. மேற்பார்வை பொறியாளர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆ. மீண்டும் 19.06.2012 தினமலர் நாளிதழில் அறிவிப்பு வெளியிட்டார்கள். அன்றைய தினமே புகார் மனு விரைவு தபால் ஒப்புதல் அட்டையுடன் தலைவர், மின்வாரிய குறை தீர்க்கும் மன்றம், திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பினார். 30.06.2012 அன்று மேற்பார்வை மின்பொறியாளர் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி மனுதாரருக்கு கடிதம் அனுப்பி இருந்தார்கள். (கடித எண்: ம/தொ.அ/மே;மபாடு/உ.பொ.1/தொ.நு.உ.3/கோ.நு.கு.தீ.ம./ந.எண்: 2575/12, நாள் 23.06.2012.

இ. மனுதாரருக்கு அவருக்கு மீண்டும் மேற்படி கடிதம் அனுப்பிய 3 நாட்களுக்கு பிறகு, தலைவர், மின்குறை தீர்க்கும் மன்றம் கடித எண்: ம.தொ.அ/மேம்பாடு/உ.பொ.1/தொ.நு.உ.3/கோ.நு.கு.தீ.ம/ந.எண்: 2575/12 (நகல் இணைப்பு) அனுப்பிய கடிதத்தில் மக்கள் குறை தீர்க்கும் மன்றம் சில தவிர்க்க

முடியாத காரணத்தினால் 05.07.2012 அன்று தேதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்கள்.

ஈ. 03.07.2012 அன்று விரைவு தபால் ஒப்புதல் அட்டையுடன் 05.07.2012 அன்று மின் குறை தீர்க்கும் மன்றத்தில் உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கலந்து கொள்ள இயலாது என்று தலைவர் மேற்பார்வை பொறியாளர், தலைமை பொறியாளர் மற்றும் செயற்பொறியாளருக்கு கடிதம் மூலம் தெரிவித்தார்.

உ. மேற்பார்வை மின் பொறியாளர் 26.06.2012 தேதிக்கு பின்னர் எவ்வித நடவடிக்கையோ, தகவலோ மனுதாரருக்கு தெரிவிக்கப்படவில்லை. மேலும் பல மேல்முறையீட்டு புகார் மனு அனுப்பியும் எந்தவித நடவடிக்கையும் இல்லை.

ஊ. பயனீட்டாளர் கோமதி அம்மாள் மற்றும் இளநிலை மின் பொறியாளர் லெட்சமணப் பெருமாள் ஆகியோருக்கு உறுதுணையாக இருந்து எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் புதிய மின் இணைப்புக்கான 009–002–546 மின் வயர்கள் மின் கம்பிகள் துண்டிப்பு செய்யாமல் காலதாமதம் ஏற்படுத்தி, எந்தவித புகார்களையும், எல்லா பிரச்சனைகளையும் சமாளித்து மனுதாரரையும் மேல்மட்ட உயர் அதிகாரிகளையும் முன்னுக்குப் பின் முரணாக எழுத்து மூலம் பொய்யான தகவல்களை அனுப்பி ஏமாற்றிக் கொண்டு மேற்பார்வை பொறியாளர் ஒரு முடிவுடன் உறுதியாக செயல்படுகிறார்.

எ. பயனீட்டாளர் கோமதி அம்மாள் புதிய மின் இணைப்பு பெறுவதற்கு முன்னதாகவே மனுதாரராகிய அவர் பல ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொண்டு இருந்தார். இதற்கு மாறாக கோமதி அம்மாள், அவரது மகன் ஆதிகேசவனிடம் இளநிலை மின்பொறியாளர் லெட்சுமணப் பெருமாள் பல ஆயிரம் ரூபாய்கள் கையூட்டம் பெற்றுக்கொண்டு சட்டவிரோதமாகவும், மின்வாரிய விதிமுறைகளை மீறியும் மனுதாரராகிய அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருக்கும்

போது அதையும் மீறி அவருக்கும் பாத்தியப்பட்ட இடத்தின் வழியாக புதிய மின் இணைப்பிற்கான (009–002–546) புதிய மின் வயர்கள், மின் கம்பிகள் கொண்டு சென்று அதிகார துஷ்பிரயோகம் அராஜகம் செய்து ரௌடித்தனம் செய்து அத்துமீறி 26.09.2005 அன்று பேட்டைஇளநிலை மின் பொறியாளர் லெட்சுமணப் பெருமாளால் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது.

ஏ. திருநெல்வேலி மாவட்ட 1வது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் மனுதாரர் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்: 1224/2004 நீண்ட விசாரணைக்கு பிறகு 02.03.2011 அன்று தீர்ப்புரை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை மனுதாரராகிய அவருக்கு அனுகூலமாகி உள்ளது. திருநெல்வேலி மாவட்ட கூடுதல் சார்வு நீதிமன்றம் வழக்கு எண்: A.S. 42/2011 விசாரணைக்கு பிறகு தீர்ப்புரை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை 30.08.2011 அன்று தீர்ப்பு வழங்கி ஊர்ஜிதம் செய்யப்பட்டது. கோமதி அம்மாளுக்கு எதிராக மேலே குறிப்பிட்டுள்ள நீதிமன்ற வழக்குகள் தீர்ப்புரை வழங்கி ஒரு வருடத்திற்கு மேலாகியும் எந்தவித நடவடிக்கையும் மேற்பார்வை மின்பொறியாளர் எடுக்காமல் நீதிமன்ற தீர்ப்புரையை அவமதித்து கேலிக்கூத்து ஆக்குகிறார்கள்.

ஐ. ஆகையால், மேற்பார்வை மின் பொறியாளர் மீது நடவடிக்கை எடுத்து மற்றும் இளநிலை மின்பொறியாளர் லெட்சமணப் பெருமாள் மீதும் நடவடிக்கை எடுத்தும், மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட இடத்தின் வழியாக புதிய மின் இணைப்பிற்கு (009, 002, 546) செல்லும் மின் கம்பிகள், மின் ஒயர்களை துண்டிப்பு செய்ய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஆணை பிறப்பித்து உத்தரவு இட வேண்டுகிறார்.

ஒ. 14.10.2004ல் சரஸ்வதி அம்மாளாகிய மனுதாரர், கோமதி அம்மாள் மற்றும் அவரது மகன் ஆதிகேசவன் மீது திருநெல்வேலி மாவட்ட 1–வது கூடுதல் நீதிமன்றத்தில்

வழக்கு தாக்கல் செய்தார் வழக்கின் பொருள் மனுதாரர் உடன் பிறந்த தம்பி சங்கரன் அவருக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்த நன்கொடை பத்திரம் (17.08.1979) மூலம் கதவு எண் : 80 (T.S.No. 1341)ன் வடபகுதி காலிமனை மற்றும் கதவு எண் : 80ன் மேற்பகுதி நடைபாதை முடுக்கு ஆகிய இடத்தில் கோமதி அம்மாளும் அவரது மகன் ஆதிகேசவனும் அடிக்கடி இடைஞ்சல்களும், தொந்தரவுகள் செய்ததால் பலமுறை பேட்டை காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டும் (புகார் எண்: 236, நாள் 23.09.2004) எந்தவித பலனும் இல்லாததால் நீதிமன்றத்திற்கு சென்றார். கோமதி அம்மாள் புதிய கதவு எண் : 80/1க்கு 30.08.2005 அன்று புதிய மின் இணைப்பு வேண்டி மனுதாக்கல் செய்தார். மேற்பார்வை பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் திருநெல்வேலி கடித ந.எண்: 1747, நாள் 09.05.2012 கடிதத்தில் கோமதி அம்மாளிடம் ரூ.80/– பத்திரத்தில் பிணைய உறுதிமொழி பத்திரம் பெற்றுக் கொண்டபின் புதிய மின் இணைப்பு (புதிய கதவு எண் : 80/1க்கு) வழங்கப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறார். புதிய மின் இணைப்பு எண்: 009 002 546. இது முற்றிலும் பொய் ஆகும். பிணையப் பத்திரம் 80 ரூபாய் அல்ல. 20 ரூபாய் பத்திரம் ஆகும். பத்திர எண்: 9936 பிணைய பத்திரம் கொடுத்த தேதி 22.07.2005 ஆனால் கோமதி அம்மாள் பிணையப் உறுதிமொழி பத்திரம் 22.07.2005 அன்று கொடுத்த பிறகு ஒருமாதம் கழித்த பிறகு 30.08.2005 அன்றுதான் புதிய மின் இணைப்பு வேண்டி மனு கொடுத்திருக்கிறார். இதை ஆதார, ஆவண நகல்களுடன் இத்துடன் மனுதாரர் இணைத்துள்ளார். இதை கவனமாகப் பார்த்து பரிசீலனை செய்யுமாறு மனுதாரர் வேண்டுகிறார்.

ஓ. 30.08.2005 அன்று தமிழ்நாடு மின்சார வாரியம் உறுதிமொழி படிவத்தில் குறிப்பிட்டுள்ள 4 (ஆ) மின் இணைப்பிற்கு எடுத்துச் செல்லப்படும் வயர் பிறரிடத்திற்கு (கட்டிடம், காலிமனை) மேல் செல்வதாயிருந்தால் அவ்விடத்தின்

உரிமையாளரின் தடையில்லாச் சம்மதக் கடிதம் (No objection Certificate) இணைக்கப்பட்டுள்ளது என்று பொய்யாகக் கோமதி அம்மாள் கூறியிருக்கிறார். சரஸ்வதி அமமாளாகிய மனுதாரர் சம்மத கடிதம் கொடுக்கவில்லை. **30.08.2005** அன்று கோமதி அம்மாள் எவ்வித வழக்குகளோ, ஆட்சேபணைகளோ இல்லை என்று கூறியிருக்கிறார். உண்மையை மறைத்திருக்கிறார்.

ஔ. சரஸ்வதி அம்மாளாகிய மனுதாரர் **02.09.2005**ல் தலைமை பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்பார்வை பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் இளநிலை மின்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் பேட்டை காவல் துறை ஆய்வாளர் ஆகியோருக்கு அவரது வழக்கறிஞர் மூலம் ஆட்சேபணை தந்தி கொடுத்தார். அதையும் மீறி **17.08.1979** அன்று பதிவு செய்யப்பட்ட நன்கொடை பத்திரத்தின் மூலம் மனுதாரரின் பெயரில் உள்ள இடத்தின் வழியாக புதிய கதவு எண்: **80/1**க்கு புதிய மின் இணைப்பு கொடுக்க மின்கம்பிகள், மின்வயர்கள் கொண்டு செல்ல மனுதாரரின் இடத்தில் அத்துமீறி (Tresspass) உள்ளே நுழைந்து மின்வாரிய ஊழியர்கள் காவல்துறை உதவியுடன் அவரது இடத்தை அளவிட்டு மின் கம்பிகளையும், மின் வயர்களையும் அன்னதான விநாயகர் கோவில் தெருவில் புதியதாக சிறப்பு மின்கம்பம் அமைத்து அந்த புதிய மின் கம்பத்தில் இருந்து புதிய கதவு எண்:**80/1**க்கு புதிய மின் இணைப்பு **26.09.2005**ல் **(009 002 546)** கொடுத்திருக்கிறார்கள் புதிய மின் இணைப்பு கொடுக்கும் போது அசல் வழக்கு எண்: O.S.No 1224/2004 நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது பயனீட்டாளர் கோமதி அம்மாள் **22.07.2005**ல் **20** ரூபாய் உறுதிமொழி பிணைய பாத்திரத்தில் வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்று கையெழுத்திட்டு தெரிவித்து இருக்கிறார். பின் ஒரு மாதம் கழித்து **30.08.2005**ல் தமிழ்நாடு மின்சார

வாரிய உறுதிமொழி படிவத்தில் எந்த வழக்குகளும் இல்லை என்று கையொப்பம் செய்து சாட்சி கையொப்பத்தோடு உறுதிமொழி வழங்கியிருக்கிறார். தமிழ்நாடு மின்சார வாரிய விதிமுறை மீறலா அல்லது கோமதி அம்மாளக்கு மட்டும் விதிவிலக்கா ?

க. வாரிய சான்றிதழில் மனுதாரராகிய சரஸ்வதி அம்மாளும் அவரது சகோதரர் விநாயகப் பெருமாளும் இருக்கிறார்கள். மனுதாரரும் அவரது சகோதரர் விநாயகப் பெருமாளும் சம்மதக் கடிதம் கோமதி அம்மாளுக்கு கொடுக்கவில்லை. 30.08.2005ல் கோமதி அம்மாள் புதிய கதவு எண்: 80/1க்கு புதிய மின் இணைப்பு வேண்டி பேட்டை இளநிலை மின் பொறியாளருக்கு மனு தாக்கல் செய்திருக்கிறார். புதிய மின் இணைப்பிற்கு மனுதாக்கல் செய்வதற்கு மூன்று மாதத்திற்கு முன்பாகவே 23.05.2005ல் அரசு வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரை வாங்கிவிட்டார்கள். (நகல் இணைப்பு) புதிய கதவு எண்: 80/1க்கு புதிய மின் இணைப்பு கோரிய மனுவின் நகலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கா. கணபதியா பிள்ளை கோமதி அம்மாளுக்கு புதிய மின் இணைப்பு வழங்க எந்த ஆட்சேபணையும் இல்லை என்று தேதி குறிப்பிடாமல் பேட்டை இளநிலை மின் பொறியாளருக்கு கொடுத்த கடிதத்தில்கோமதி அம்மாள் புதிய கதவு எண் : 80/1ல் சுமார் 8 வருடங்களாக வசித்து வருகிறார் என்று கூறியிருக்கிறார். ஆனால் புதிய கதவு எண் : 80/1 என்று திருநெல்வேலி மாநகராட்சியால் 31.05.2004ல் தான் உருவாக்கப்பட்டது. இந்நிலையில் கோமதி அம்மாள் 8 வருடங்களாக குடியிருந்து வருகிறார் என்றால் ஷை கடிதமும் மோசடியானதும், சட்டவிரோதமானதும் ஆகும்.

கி. கதவு எண் : 80ன் மேற்கு பகுதி முடுக்கு சரஸ்வதி அம்மாளாகிய மனுதாரருக்கு 17.08.1979 பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின்படி சொந்தம் அவரது இடத்தின் வழியாக புதிய மின் கம்பிகள், மின் வயர்கள் கொண்டு செல்லக்கூடாது என்று மனுதாரராகிய

அவர் பலமுறை பேட்டை இளநிலை மின்பொறியாளர் லெட்சுமணப் பெருமாளுக்கு நேரடியாகவும், வழக்கறிஞர் மூலம் பல ஆட்சேபணை தந்திகள் அனுப்பியும் அதையும் மீறி பயனீட்டாளர் கோமதி அம்மாள் அவரது மகன்ஆதிகேசவபெருமாளிடம் பல ஆயிரம் ரூபாய் லஞ்சப்பணம் பெற்றுக் கொண்டு மேற்படி மூவரும் கூட்டாக சேர்ந்து பேட்டை இளநிலை மின்பொறியாளர் லெட்சமணப் பெருமாளிடம் மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட இடத்தின் வழியாக மின்கம்பிகள், மின் ஒயர்கள் செல்லக்கூடாது மேலும் மனுதாரர் பதிவு செய்யப்பட்ட 1224/2004 வழக்கு நிலுவையில் நீதிமன்றத்தில் உள்ளது என்று கூறியதன் மூலம் அதனை பொருட்படுத்தாமல் அவரது இடத்திற்கு காலை 10 மணி அளவில் வந்து இளநிலை மின்பொறியாளர் லெட்சுமணப் பெருமாளின் தூண்டுதலின் பேரில் கோமதி அம்மாள் மற்றும் அவரது மகன் ஆதிகேசவனால் 23.08.2005ல் மனுதாரர் தாக்கப்பட்டார். பேட்டை காவல் நிலையத்தில் குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை 1289/2005 ஆகும்.

கீ. 30.08.2005ல் இளநிலை மின்பொறியாளர் மற்றும் மின் ஊழியர்கள ஆதிகேசவன், கோமதி அம்மாள் ஆகியோர் புதிய கதவு எண்: 80/1க்கு புதிய மின் வயர்கள், மின் கம்பிகளை அத்துமீறி கொண்டு செல்ல முயற்சி செய்தார்கள். ஆகையால் சரஸ்வதி அம்மாளாகிய மனுதாரர், தலைமை பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் பகிர்மான வட்டம், மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் பகிர்மான வட்டம், பேட்டை இளநிலைமின் பொறியாளர், நகர்புறம் ஆகியோருக்கு 02.09.2005ல் 80ன் மேற்கு பகுதி முடுக்கு மின் வயர்கள் மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட இடத்தின் வழியாக கதவு எண் : 80/1க்கு புதிய மின் ஒயர்கள் மின்கம்பிகள் செல்லக்கூடாது என்றும் மேலும் 1224/2004 வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் அவரது வழக்கறிஞர் மூலம் ஆட்சேபணை தந்திகள் அனுப்பி

உள்ளார். (நகல் இணைப்பு) கோமதி அம்மாள், அவரது மகன் ஆதிகேசவபெருமாள் வகையறாக்கு கதவு எண்: 80ஆம் நம்பர் வீட்டின் மேற்குப் பகுதி முடுக்கில் எந்தவித உரிமையோ, புழங்குவதற்கு எந்தவித அருகதையோ கிடையாது. கதவு எண்: 80ஆம் நம்பர் வீட்டின் மேற்கு பகுதி முடுக்கு கோமதி அம்மாள் அவரது மகன் ஆதிகேசவ பெருமாள் ஆகியோருக்கு உரிமை கொண்டாட எந்த ஆதார ஆவணமும் கிடையாது.

கு. தற்பொழுது திருநெல்வேலி மாவட்ட 1–வது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்: O,S, No, : 1224/2004 நீண்ட விசாரணைக்குப்பின் 02.03.2011ல் கோமதி அம்மாள் ஆதிகேசவனுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கி (permanent Injunction) தீர்ப்புரைவழங்கப்பட்டது. டி.எஸ்.எண் : 1341 கதவு எண்: 80ன் வடபகுதி காலிமனை மேற்கு பகுதி நடைபாதை முடுக்கு ஆவுடையப்பனாகிய மனுதாரர் மகனுக்கும், சரஸ்வதி அம்மாளாகிய மனுதாரருக்கும் உரிமை, அனுபவ பாத்தியதை இருக்கிறது. இதில் கோமதி அம்மாளுக்கோ, அவரது மகன் ஆதிகேசவனுக்கோ உரிமையும் பாத்தியதையும் கொண்டாட எந்தவித அருகதையும் கிடையாது. கோமதி அம்மாள் பெயரில் பத்திரங்களோ, ஆவணமோ கிடையவே கிடையாது. டி.எஸ். 1341, மேற்கு பகுதி நடைபாதை பொது நடைபாதை அல்ல. சரஸ்வதி அம்மாளாகிய மனுதாருக்குப் பாத்தியப்பட்ட இடமாகும். (கதவு எண்: 80ன் வரைபட நகல்)

கூ. கோமதி அம்மாளும், ஆதிகேசவனும் திருநெல்வேலி மாவட்ட 1–வது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்: O.S. No: 1224/2004, நாள் : 02.03.2011 தீர்ப்புரையை எதிர்த்து மேல் முறையீட்டு வழக்கு (Appeal) திருநெல்வேலி மாவட்ட கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்

செய்யப்பட்டது. வழக்கு எண்: A.S. No 42/2011 மீண்டும் கோமதி அம்மாள், ஆதிகேசவனுக்கு எதிராக அசல் வழக்கு எண் O.S. No: 1224/2004, நாள் : 02.03.2011 உறுத்துக்கட்டளை (Perrmanent Injunction) தீர்ப்புரை ஊறுதி செய்யப்பட்டு மிகவும் தெளிவாக விரிவான திருநெல்வேலி மாவட்ட கூடுதல் சார்வு நீதிமன்றத்தில் வழக்கு A.S. No 42/2011 வழக்கின் தீர்ப்புரை நாள்30.8.2011 அன்று வழங்கப்பட்டு கோமதி அம்மாள், ஆதிகேசவனக்கு மேல்முறையீடு (appeal) வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

கெ. பயனீட்டாளர் கோமதி அம்மாளுக்கு புதிய கதவு எண்.80/1 க்கு திருநெல்வேலி மாநகராட்சி புதியதாக வீட்டு தீர்வை ரசீது கணபதியார் பிள்ளை அதர்ஸ் வரிவிதிப்பு எண்.110540 வழங்கியது. ஆனால் புதிய கதவு எண்.80/1க்கு குடிநிர் இணைப்பு (Drinking Water Connection) இன்று வரை வழங்கப்படவில்லை ஏனென்றால் மேற்குறிப்பிட்டுள்ள அசல் வழக்கு எண்.1224 / 2004 மற்றும் 42/2001 ஆகிய இரண்டு நீதிமன்ற தீர்ப்புரையில் சரஸ்வதி அம்மாளுக்கு 17.8.1979 நன்கொடை பத்திரம் மூலம் பாத்தியப்பட்ட இடமாகிய கதவு எண்.80இன் மேற்குப் பகுதி முடுக்கு கதவு எண். 80 ன் வடபகுதி காலிமனை ஆகிய இடத்தின் வழியாக எந்தவித இடைஞ்சலோ, பாதிப்போ ஏற்படக்கூடாது என கோமதி அம்மாள் மற்றம் ஆதிகேசவனுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் திருநெல்வேலி மாநகராட்சி கோமதி அம்மாள பணம் செலுத்தியும் குடிநீர் இணைப்பு இந்நாள் வரை வழங்கப்படவில்லை.

கே. திருநெல்வேலி தமிழ்நாடு மின்சார வாரிய நகர்புறம் செயற்பொறியாளர் 17.3.2012 கடித எண். 356 எழுத்துபூர்வமாக மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி பதில்கள் பிறர் இடத்தின் காலிமனை, கட்டிடம் வழியாக புதிய மின்

இணைப்புக்கு மின் ஒயர்கள், மின் கம்பிகள் கொண்டு செல்வதற்கு கண்டிப்பாக இடத்தின் உரிமையாளரிடம் சம்மதக் கடிதம் பெற வேண்டும் என்று கூறியிருக்கிறார். தமிழ்நாடு மின்சார வாரியம் நீதிமன்றம் உத்தரவு , தீர்ப்புரை கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார். ஆனால் பயனீட்டாளர் கோமதி அம்மாளுக்கு மட்டும் திருநெல்வேலி தமிழ்நாடு மின்சார வாரியம் விதிமுறைகளை மீறி செயல்பட்டு இருக்கிறது.

கோ. திருநெல்வேலி மாவட்டட 1வது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.1224/2004க்கு 2.3.2011இல் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் திருநெல்வேலி மாவட்ட கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண், AS.42/2011ற்கு 30.8.2011இல் வழங்கிய தீர்ப்புரை ஆகிய இரு நீதிமன்றங்களின் தீர்ப்புரைகளின் அடிப்படையிலும், மேலும் மின்வாரிய விதிமுறைகள் மீறல் அடிப்படையிலும் 009–002–546 புதிய மின்இணைப்பு மின்கம்பிகள் மின்வயர்கள் துண்டிப்பு செய்யப்படவேண்டும்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரை :</u>

எதிர்மனுதாரர் அவருடைய 24.11.2012 நாளிட்டக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பதிலுரையில் கீழ்கண்டவாறு வாதங்களை தெரிவித்துள்ளார்.

(i) திருமதி. கோமதி அம்மாள் என்பவர் 80/1, அன்னதான விநாயகர் கோயில் தெருவிலுள்ள தனது வீட்டிற்கு மின்னிணைப்பு பெறும் வகையில் செயற்பொறியாளர்/விநியோகம் / நகர்புறம் / திருநெல்வேலி அலுவலகத்தை அணுகியுள்ளார். அவரது மின்னிணைப்பிற்கான விண்ணப்பத்தினை பேட்டை விநியோகப் பிரிவில் அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டு 30.8.2005 அன்று பேட்டை விநியோகப் பிரிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் விண்ணப்பத்துடன் சார்பு ஆவணங்களான 4.4.2005 நாளிட்ட வீட்டு வரி ரசீது,

திரு.கணபதியாபிள்ளை அவர்களது தடையில்லா சான்று வாரிசு சான்றிதழ் ரூ.80/– பத்திரத்தில் பெற்றுக் கொண்ட பிணை உறுதிமொழி பத்திரம் ஆகியவற்றை பெற்றுக் கொண்டபின்தான் மேற்படி கதவு எண். உள்ள இல்லத்திற்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது. திருமதி கோமதி அம்மாள் கதவு எண். 80/1இல் குடியிருந்து குடும்ப அட்டையும் பெற்று பயன்படுத்தி வருகிறார் இதற்கு திரு. கணபதியாபிள்ளை அவர்களும் சம்மதக் கடிதமும் கொடுத்துள்ளார். இதற்கிடையில் கூட்டுரிமையாளர்கள் நிலையில் உரிமையியல் வழக்கு ஏற்பட்டுள்ளதால் அரசு வழக்கறிஞரின் கருத்துருவும் பெறப்பட்டுள்ளது.

(ii) இந்த மின்னிணைப்பானது வாரிய விதி (Distribution Code) 27(4)இன் படி சட்டபூர்வமான குடியிருப்பாளர் என்ற வகையில் திருமதி. கோமதி அம்மாள் அவர்களுக்கு சரியான முறையில் தான் வழங்கப்பட்டுள்ளது.

(iii) மின்னிணைப்பு பெறப்பட்ட பின்னர் திரு. ஆவுடையப்பன் மற்றும் அவரது தாயார் திருமதி. கோமதி அம்மாள் க/பெ. வீரபாகு செட்டியார் ஆகிய அவர்கள் மேற்படி வழங்கப்பட்ட மின்னிணைப்பினை துண்டிக்கவேண்டி பலமுறை மனுக்கள் அளித்துள்ளார்கள். அவர்களுக்கு இவ்வலுவலகம் மூலம் பலமுறை பதில்கள் அளிக்கப்பட்டுள்ளது.

(iv) தமிழ்நாடு மின்சார வாரியம் ஒழுங்குமுறை ஆணைய விதிப்படி உரிய ஆவணங்கள் பெறப்பட்டு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இதை தொடர்ந்து மறுபடியும் மேற்கண்ட இருவரும் மனு கொடுத்துக் கொண்டு இருந்தபடியால் அடுத்து நடைபெறவிருந்த மக்கள் குறைதீர்க்கும் மன்றக் கூட்டத்திற்கு வருகை தரும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர் கலந்து கொள்ள இயலாமையை தந்தி மூலம்

தெரிவித்திருந்தார். மீண்டும் 27.2.2009 அன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தில் கலந்து கொள்ளும்படி பதிவுத்தபால் மூலம் மனுதாரருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், மனுதாரரால் மேற்படி பதிவுத் தபால் பெறப்படாமல் இவ்வலுவலகத்தில் மீண்டும் 27.2.2009 அன்று திரும்ப பெறப்பட்டது. ஆனால் மீண்டும் இதே கோரிக்கைக்கு மின்னஞ்சல் மூலமாகவும், தபால் மூலமாகவும் தொடர்ந்து புகார் பெறப்பட்டு வருகிறது. இவ்வலுவலகத்தில் இம்மனுதாரரால் பெறப்படும் அனைத்து புகார் மனுக்களுக்கும் உடனுக்குடன் பதில் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

(v) மேலும் மீண்டும் 10.12.2009 அன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் மன்றத்தில் கலந்து கொள்ளும்படி அழைப்பு அனுப்பப்பட்டது. அதில் கலந்து கொண்ட அவர் இந்த பிரச்சனையை சட்டப்பூர்வமாக சந்தித்து கொள்வதாக கூறிவிட்டு மன்றத்திலிருந்து பாதியில் எழுந்து சென்றுவிட்டார்கள்.

(vi) மின்வாரியத்தை எதிர்த்து மின்னிணைப்பு வழங்கப்பட்டதற்காக கொடுக்கப்பட்ட வழக்கு எண்.OS 267/2005இல் மின்னிணைப்பு வழங்கப்பட்டது மின்சார சட்டத்தின்படி சரி என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

(vii) இதனை தொடர்ந்து மேல்முறையீடு செய்து தொடரப்பட்ட வழக்கு என் AS. 68/2011 மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் மனுதாரர் திருமதி. சரஸ்வதி அம்மாள் தனக்கு சாதகமாக வழங்கப்பட்டதாக தெரிவிக்கும் தீர்ப்பின் நகல் பெறப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இது மனுதாரர் குடும்பத்தில் உள்ள சொத்து சம்பந்தமாக பெறப்பட்டது. இதில் மின் வாரியத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லை.

(viii) மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம் ஒழுங்குமுறை ஆணையத்தின் Supply Code அத்தியாயம் 3 பிரிவு 21இன் படி எந்தவொரு மின்னிணைப்பையும் மின்கட்டணம் செலுத்தாத நிலை மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முறையான அறிவுறுத்தலின்படியும் நீதிமன்ற தீர்ப்பின்படியும் மட்டுமே மின் துண்டிப்பு செய்ய இயலும்.

5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u> :

மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர் மனுதாரர் இருவரும் தங்களுடைய வாதங்களை நேரிடையாக எடுத்துரைப்பதற்கு வசதியாக 6.12.2012 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

6. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u> :

6.1 மேல்முறையீட்டாளரின் சார்பில் திரு. ப. ஆவுடையப்பன் அவர்கள் கலந்து தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார். திரு. வி. ஆவுடையப்பன் அவர்கள் மேல்முறையீட்டு மனுவில் உள்ள வாதங்களை திரும்பவும் வலியுறுத்தியுள்ளார்.

6.2 மேல்முறையீட்டாளர் முறையாக தன்னுடைய ஆட்சேபனைகளை தெரிவித்திருந்தும், வழக்கு நிலுவையில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டும், மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது தவறு என்று வாதிட்டார்.

6.3 மின்னிணைப்பு பெற விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் கீழ்க்கண்ட விபரங்கள் சரியாக இல்லாமல் இருந்தும், விதிகளை மீறி மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

(அ) விண்ணப்பத்தில் பிறர் இடத்தின் வழியாக மின் வயர்கள் எடுத்து செல்வதற்கு தடையில்லா சான்று இணைக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், இணைக்கப்படவில்லை.

(ஆ) இந்த மின்னிணைப்பு பெறுவதற்கு எதிராக வழக்குகளோ அல்லது ஆட்சேபனையோ இல்லை என்று கூறப்பட்டுள்ளது . ஆனால், சொத்து பற்றிய வழக்கு OS No.1224 / 2004 நிலுவையில் இருந்தது.

(இ) உறுதிமொழி பத்திரம் (undertaking) 22.7.2005 அன்று தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் விண்ணப்பம் 30.8.2005இல் தான் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(உ) சட்ட வல்லுநரின் கருத்து 23.5.2005 அதாவது விண்ணப்பம் பெறுவதற்கு சுமார் 3 மாதங்களுக்கு முன்பே பெறப்பட்டுள்ளது.

(ஊ) கதவு எண். 80/1 என்பது 31.5.2004இல் தான் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் அந்த வீட்டில் 8 வருடங்களாக இருப்பதாக திரு. கணபதி செட்டியார் அவர்கள் கூறியுள்ளார்கள். இது தவறு.

6.4 மேலும், அவர் கோமதி அம்மாள் வசித்து வரும் 80/1 உள்ள வீட்டிற்கு தங்களின் ஆட்சேபனையின் காரணமாக மாநகராட்சி குடிநீர் இணைப்பு வழங்க வில்லை என்றும் தெரிவித்தார்.

6.5 மேற்படி வீட்டிற்கு செல்லும் மின்னிணைப்பு வயர், மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான நடைபாதை முடுக்கு வழியாக செல்கிறது. அது அவரின் அனுமதியில்லாமல் செய்யப்பட்டது எனவே அந்த மின்னிணைப்பு ஒயர் துண்டிக்கப்படவேண்டும் என்றும் வாதிட்டார்.

6.6 மேலும், அவர் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆட்சேபனை வந்தால் அந்த ஆட்சேபனையை விண்ணப்பதாரரிடம் தெரிவித்து அந்த ஆட்சேபனையை நிவர்த்திக்கக்கூடிய ஆவணங்களை கேட்பது வழக்கம். ஆனால் இங்கு அதுபோல் எதுவும் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்து மேற்கண்ட வாதத்திற்கு ஆதாரமாக இளநிலை

பொறியாளர் / நகரம் II அவர்கள் திருமதி. பாலம்மாள் , கருங்குளம், அவர்களுக்கு எழுதிய கடிதத்தையும் சுட்டிகாட்டினார்.

6.7 மேலும், அவர் தனது சார்பாக 4.12.2012ல் பட்டியலிட்டுள்ள ஆதார ஆவணங்களின் நகல்களையும் அளித்தார்.

7. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u> :

7.1 எதிர்மனுதாரரின் சார்பில் திரு. ஏ.பி. சேகர் செயற்பொறியாளர் / நகரம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார் அவரும் எதிர்மனுதாரரின் பதிலுரையில் கூறியவைகளை திரும்பவும் எடுத்துரைத்தார்.

7.2 கோமதியம்மாள் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பத்துடன் தேவையான ஆவணங்களை இணைத்துள்ளதால் அவர் சட்டபூர்வமாக குடியிருப்போர் என்று தெரிந்ததால் மின்னிணைப்பு வழங்கப்பட்டது என்று கூறினார்.

7.3 செயற்பொறியாளர் அவர்கள் மேல் முறையீட்டாளரின் ஆட்சேபனை பெறப்பட்டது என்பதை ஒத்துக் கொண்டார். ஆனால், தடையுத்தரவு எதுவும் இல்லை என்பதினால் மின் இணைப்பு சட்ட கருத்துரு பெறப்பட்டுதான் வழங்கப்பட்டது என்று கூறினார்.

7.4 சட்டக் கருத்துரு விண்ணபத்தின் நாளுக்கு 3 மாதங்களுக்கு முன்பே பெறப்பட்டது என்ற வாதத்திற்கு அவர் சட்டக் கருத்துரு பெற்ற நாள் 19–8–2005 என்றும் ஆட்சேபனை இருந்ததினால் சட்ட கருத்துரு விண்ணப்பத்தினை பதிவு செய்வதற்கு முன்பு பெறப்பட்டது என்றும், விண்ணபத்தினை பதிவு செய்த நாள் 30–8–2005 என்றும் தெரிவித்தார்.

7.5 சட்ட கருத்துருவில் தடை உத்தரவு எதுவும் OS NO 267 of 2005ல் இல்லை என்பதினால், மின் இணைப்பு கொடுக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்தார்.

7.6 மேலும், இந்த மின் இணைப்பு கொடுக்கப்பட்டது மின்சார சட்டத்தின்படி சரிதான் என்று OS NO 267 of 2005 என்ற வழக்கில் திருநெல்வேலி முதன்மை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதாக தெரிவித்தார் மேலும் அந்த தீர்ப்பின் மீது மேல் முறையீட்டாளரின் மேல் முறையீடு செய்த வழக்கு எண் AS 68 of 2011 தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்தார்.

7.7 அரசு வழக்குறைஞர் அவர்கள் தன்னுடைய 13.9.2005 தேதியிட்ட சட்ட கருத்தில் கோமதி அம்மாளுக்கு புதிய மின்னிணைப்பு நடைபாதை வழியாக கொண்டு செல்வதில் எவ்விதமான சட்டத்தடையுமில்லை என்று தெரிவித்துள்ளதாக தெரிவித்தார்.

7.8 மேலும், மேல் முறையீட்டாருக்கு சாதகமாக நிரந்தர உறுத்துக்கட்டளை எதுவும், மின்சார வயர் செல்லும், நடைபாதையில் நீதிமன்றத்தின் தீர்ப்பில் வழங்கபடவில்லை என்றும். கூறி மின்சார வயர்களை நீக்க வேண்டியது இல்லை என்று வாதிட்டார்.

7.9 மேலும், மின் வழங்கல் விதி 21ன்படி எந்தவொரு மின்னிணைப்பும் மின்கட்டணம் செலுத்தாத நிலை மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியத்தின் முறையான அறிவுறுத்தல் அல்லது நீதிமன்ற தீர்ப்பின்படி தான மின் துண்டிப்பு செய்ய முடியும் என்றும் அந்த நிலை இந்த மின் இணைப்பில் இல்லையென்பதால், இந்த மேல் முறையீட்டாளர் கோரிய படி மின் இணைப்பை துண்டிக்க இயலாது என்றும் வாதிட்டார்.

7.10 மேலும், திருமதி. சரஸ்வதி அம்மாள் அவர்கள் மின் ஒயர்கள் செல்லும் நடைபாதை தனக்கு சொந்தம் என்பதை சட்டபூர்வமான ஆதாரங்களுடன் உறுதி செய்து, மேற்கண்ட மின்னிணைப்பிற்கு செல்லும் மின் ஒயர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று நீதிமன்ற உத்தரவு பெற்று சமர்ப்பித்தால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

**8. <u>மின்குறை தீர்ப்பாளரின் தீர்வு :</u>**

8.1 மேல்முறையீட்டாளரின் மனுவில் கூறிய வாதங்கள், அவர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள், சமர்பித்த ஆவணங்கள், எதிர் மனுதாரரின் பதிலுரையில் உள்ள

வாதங்கள், அவர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள், அவர் சமர்பித்துள்ள ஆவணங்கள்அனைத்தும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்க்கண்டவை வழக்கெழு வினாக்களாக தெரிகின்றது.

8.2 அ. திருமதி கோமதி அம்மாள் அவர்களின் 80/1 என்ற கதவு எண் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது சரியா ?

8.3 ஆ. திருமதி சரஸ்வதி அம்மாள் அவர்களின் கோரிக்கையான அந்த மின் இணைப்பிற்கு தனக்கு பாத்தியதைபட்ட நிலத்தின் வழியாக செல்லும் மின் கம்பிகள் மின் வயர்களை துண்டிப்பு செய்ய வேண்டும் என்பது ஏற்புடையதா ?

9. <u>வழக்கெழுவினா ‘அ’ விற்கான தீர்வு:</u>

9.1 மேல் முறையீட்டாளரின் சார்பில் கேட்புரை நாளில் கலந்து கொண்ட திரு. V. ஆவுடையப்பன் அவர்கள், தங்கள் மின் இணைப்பு கொடுப்பதற்கு முறையான ஆட்சேபனைகளை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்து, அந்த இடத்தின் மேல், வழக்கு உள்ளது என்று கூறியதையும் பொருட்படுத்தாது மின் இணைப்பு கோமதி அம்மாளுக்கு வழங்கப்பட்டு விட்டது என்று வாதிட்டார்.

9.2 மேலும், அவர் விண்ணப்பத்தில் கீழ்க்கண்ட குறைகள் இருந்தும், மின் இணைப்பு வழங்கப்பட்டது விதிமீறல் என்று வாதிட்டார்.

*“ (அ) விண்ணப்பத்தில் பிறர் இடத்தின் வழியாக மின்னிணைப்பிற்கு கொண்டு செல்லப்படும் மின் ஒயர்கள் செல்வதற்கு தடையில்லா சான்று இணைக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், இணைக்கப்படவில்லை.*

*(ஆ) இந்த மின்னிணைப்பு பெறுவதற்கு எதிராக வழக்குகளோ அல்லது ஆட்சேபனையோ இல்லை என்று கூறப்பட்டுள்ளது . ஆனால், சொத்து பற்றிய வழக்கு OS No.1224 / 2004 நிலுவையில் இருந்தது.*

*(இ) உறுதிமொழி பத்திரம் (undertaking) 22.7.2005 அன்று தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் விண்ணப்பம் 30.8.2005இல் தான் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*(உ) சட்ட வல்லுநரின் கருத்து 23.5.2005 அதாவது விண்ணப்பம் பெறுவதற்கு 3 மாதங்களுக்கு முன்பே பெறப்பட்டுள்ளது.*

*(ஊ) கதவு எண். 80/1 என்பது 31.5.2004இல் தான் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் அந்த வீட்டில் 8 வருடங்களாக இருப்பதாக திரு. கணபதி செட்டியார் அவர்கள் கூறியுள்ளார்கள். இது தவறு."*

9.3 எதிர் மனுதாரரின் சார்பில் கலந்து கொண்ட செயற் பொறியாளர் திரு. A.P. சேகர் அவர்கள், கோமதியம்மாளின் விண்ணப்பம் தேவையான ஆவணங்களுடன் சமர்பிக்கப்பட்டு, அவர் சட்டபூர்வமாக குடியிருப்போர் (Legal occupier) என்று தெரிந்ததினால்தான் மின் இணைப்பு வழங்கப்பட்டது என்று தெரிவித்தார்.

**9.4** மேலும், திருமதி சரஸ்வதி அம்மாளின், ஆட்சேபனை பெறப்பட்டதும், அவரின் ஆட்சேபனை மீது அரசாங்க வழக்கறிஞரின் கருத்துரை பெற்றுதான் மின் இணைப்பு வழங்கப்பட்டது என்று வாதிட்டார். மேலும் மின் இணைப்பு வழங்க கூடாது என்று வாரியத்திற்கு தடை உத்தரவு இல்லை என்றும் வாதிட்டார்.

**9.5** மேலும், இது சம்பந்தமாக, மேல்முறையீட்டாளர் தொடர்ந்த வழக்கு எண் OS NO 267 of 2005ல் திருநெல்வேலி முதன்மை நீதி மன்றம் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது மின்சார சட்டப்படி சரிதான் என்று தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும் அதற்கு மேல் முறையீட்டாளரால் மேல் முறையீடு செய்யப்பட்டு அந்த மேல் முறையீடு AS 68 of 2011ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், எனவே அந்த மின் இணைப்பு வழங்கப்பட்டது சரி என்று

நீதி மன்றமே தீர்ப்பு வழங்கியுள்ளதால், அந்த மின் இணைப்பு வழங்கியது சரிதான் என்று வாதிட்டார்.

9.6 இந்த மின் இணைப்பு வழங்கியது மின்சார சட்டத்தின்படி சரிதான் என்று OS NO 267 of 2005 என்ற வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால், அந்த தீர்ப்பின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

9.7 மேற்கண்ட அசல் வழக்கு எண் 267/2005ல் வாதியாக வீ. ஆவுடையப்பன் அவர்களும் பிரதிவாதிகளாக

1) செயற் பொறியாளர் (நகர்புறம், தமிழ்நாடு மின்சார வாரியம், திருநெல்வேலி – 11
2) இளநிலை பொறியாளர் (நகர்புறம்)
3) கோமதி அம்மாள் க/பெ சந்தணமுத்துபிள்ளை, பேட்டை, திருநெல்லேி –4

ஆகியோர்கள் உள்ளனர்.

9.8 மேலும் மேற்படி வழக்கு கதவு எண் 80, புதிய கதவு எண் 80/1, அன்னதான விநாயகர் கோவில் தெரு, பேட்டை, திருநெல்வேலி –4க்கு, 1, 2 பிரதிவாதிகள் புதிதாக 3ம் பிரதி வாதிக்கு வழங்கிய மின் இணைப்பை துண்டிக்கவும், தவறினால் வாதி நீதிமன்றம் மூலம் மின் இணைப்பை துண்டித்து அதன் செலவினை பிரதிவாதிகளிடமிருந்து வசூல் செய்து கொள்ள ஒரு செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரம் பிறப்பிக்கும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவு தொகையை கேட்டும் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். அந்த வழக்கின் தீர்ப்பு 20.8.2010 அன்று வழங்கப்பட்டது. அந்த தீர்ப்பின், இந்த மேல் முறையீட்டுற்கு சம்மந்தமான பத்தி 9 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"9. *மேலும் கட்டிடத்தின் உரிமையாளர் மட்டுமே மின்னிணைப்பு பெற வேண்டுமென்று இல்லை என்றும் அதில் குடியிருக்கும் நபர் வேண்டினாலும் மின்னிணைப்பு*

*வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளதையும் இது தொடர்பாக மேற்படி மின் வாரிய சட்டம் **2003** பிரிவு **43**இன்படி*

*"Duty to supply on request :- 1. Every distribution licesnee, shall on an application by the owner or occupier of any premises, gives supply of electricity to such premises, within one month after receipt of the application requiring such supply"*

*Tamil Nadu Electricity Distribution Code 2004, பிரிவு 27இல்*

*"Requisitions for supply of energy : -*

*(1) The provision regarding the duty of licensee as detailed in section 43 to supply electricity on request is reproduced below :*

> *(1) Every distribution licensee, shall on an application by the owner or occupier of any premises, give supply of electricity to such premises, within one month after receipt of the application requiring such supply.*

*என்று கூறியுள்ளதையும் பார்க்கும்போது உரிமையாளர் மட்டுமல்லாது குடியிருப்பவரும் மின்னிணைப்பு பெறலாம் என்றும் இது தொடர்பாக மேற்படி வாதி கொடுத்த அறிவிப்பிற்கும் **1,2** பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணம் நீதிமன்றத்தில் சான்றாவணமாக குறியிடப்படாவிட்டாலும் மேற்படி ஆவணத்தில் அரசு வழக்கறிஞர் வழங்கிய சட்ட கருத்துரை இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்ட கருத்துரையில் . . . .*

> *Smt. Gomathiammal has applied for new service connection. One Avudaiappan has filed the above suit for injunction to restrain the board from effecting new service connection in favour of Gomathiammal . The Court has not granted injunction order in favour of Avudaiyappan. The mere pendency of the suit is not a ground for refusing new service connection. Providing new service connection is an essential service. A person cannot be expected to suffer without electricity in a residential building. Therefore service connection may be given to Gomathiammal on executing bond.*

*என்று கூறியுள்ளதை பார்க்கும்போது வழக்கு நிலுவையில் இருந்தாலும் தடை உத்தரவு வழங்கப்படவில்லை என்பதாலும் குடியிருப்பவராக இருந்தாலும் அவருக்கு மின்னிணைப்பு வழங்கப்படலாம் என்பதும் இது தொடர்பாக **3**ஆம் பிரதிவாதி குடும்ப அட்டை*

*கொடுத்துள்ளார் என்பதும் ஆவணங்கள் மூலம் தெரிய வருவதாலும் மேற்படி 1,2 பிரதிவாதிகள் உரிய சட்ட கருத்துரை பெற்றே மின் இணைப்பு வழங்கியுள்ளதாக தெரியவருகிறது. எனவே மேற்படி வாதி கூறியபடி சட்டவிரோதமாக மின்னிணைப்பு வழங்கப்பட்டள்ளதாக வாதி தரப்பில் நிரூபிக்காததாலும் வாதிக்கு மேற்படி சொத்து முழுவதும் உரிமைப்பட்டது என்பதைக் காட்ட உறுதியான ஆவணம் இல்லாததையும் 3ஆம் பிரதிவாதி மேற்படி கதவு எண்.80/1 வசித்து வருவது ஒப்புக் கொள்ளப்படுவதாலும் தற்போதைய காலத்தில் மின்னிணைப்பு இல்லாமல் ஒரு நபர் வீட்டில் வசிக்க முடியாது என்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மேற்படி 1,2 பிரதிவாதிகள் மின்னிணைப்பு வழங்கியதில் சட்ட ரீதியாக எந்த தவறும் ஏற்படவில்லை என்பதால் வாதி வழக்கில் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதல்ல என்றே இந்த எழுவினாவிற்கு விடை காணப்படுகிறது*

*10. எழுவினா. 2 – மேற்படி எழுவினாவிற்கு தீர்வு காணப்பட்டுள்ளதைத் தவிர வாதிக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத் தக்கதில்லை என்று இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது. "*

**9.9** மேற்கண்ட ஆணையை கூர்ந்து படிக்கும்பொழுது, வாதிக்கூறியபடி சட்ட விரோதமாக மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளதை வாதி தரப்பில் நிருப்பிக்காததாலும், வாதிக்கு மேற்படி சொத்தில் முழுவதும் உரிமைப்பட்டது என்பதைக் காட்ட உறுதியான ஆவணம் இல்லாததையும், 3ஆம் பிரதிவாதி மேற்படி கதவு எண்.80/1இல் வசித்து வருவதாக ஒப்புக் கொள்ளப்படுவதாலும், தற்போதைய காலத்தில் மின்னிணைப்பு இல்லாமல் ஒரு நபர் வீட்டில் வசிக்க முடியாது என்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மேற்படி 1, 2ஆம் பிரதிவாதிகள் மின்னிணைப்பு வழங்கியதில் சட்டரீதியாக எந்த தவறும் ஏற்படவில்லை என்பதினால் வாதி வழக்கில் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த எழு வினாவிற்கு விடைகாணப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது இதில் மேற்படி 1, 2ஆம் பிரதிவாதிகள் மின்னிணைப்பு வழங்கியதில் சட்டரீதியாக தவறு எதுவும் ஏற்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது . எனவே,

இந்த மின்னிணைப்பு வழங்கியது சட்டப்படி சரிதான் என்று திருநெல்வேலி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது .

9.10 மேலும், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகள் 2004இன் 17(4) விதி கீழே தரப்பட்டுள்ளது.

*“(4) கீழே குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*
*அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமதாரர் குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்த முறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த இரண்டு மாதங்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். பிரிவு 17 (1) ல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*

*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (*subject matter*) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*

*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது. ”*

9.11 மேற்கண்ட விதி 17(4)(ஈ) யினை கூர்ந்து படிக்கும்பொழுது, முறையீட்டில் குறிப்பிடப்பட்ட புகார் ஏதாவது நீதிமன்ற நடவடிக்கையில் நிலுவையிலிருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருந்தால், அந்த முறையீடு மின்குறைதீர்ப்பாளரால் தீர்வு காண எடுத்துக் கொள்ளக்கூடாது என்று தெரிகிறது.

9.12 எனவே, திருமதி. கோமதி அம்மாளுக்கு மின்னிணைப்பு வழங்கியது சட்டப்படி சரிதான் என்று திருநெல்வேலி முதன்மை மாவட்ட உரிமையியல் மன்றம் ஏற்கனவே தீர்ப்பு வழங்கியுள்ளதால் மன்ற விதி 17(4)(ஈ)இன்படி, மின்குறைதீர்ப்பாளர் மேற்கண்ட வழக்குகெழுவினாவை தீர்வுகாண எடுத்துக் கொள்ள முடியாது என்று தெரிகிறது.

10. <u>வழக்கெழு வினா 'ஆ' விற்கான தீர்வு</u>

10.1 திருமதி. சரஸ்வதி அம்மாள், திருமதி. கோமதி அம்மாளுக்கு கொடுக்கப்பட்டுள்ள மின்னிணைப்பு எண்.009–002–546 மின்கம்பிகள் மற்றும் வயர்கள் அவருக்கு பாத்தியப்பட்ட நிலங்களின் வழியாக செல்வதாகவும், அவை அகற்றப்படவேண்டும் என்றும், அதன் வழியாக மின்னிணைப்பு தருவதற்கு தான் சம்மதக் கடிதம் கொடுக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

10.2 மேலும், திருமதி. சரஸ்வதி அம்மாள் அவர்கள், மேற்கண்ட திருமதி. கோமதி அம்மாளின் மின்னிணைப்பிற்கு கொண்டு செல்லப்படும் மின்கம்பிகள், மின்வயர்கள் அவருக்கு சொந்தமான இடத்தின் வழியாக செல்வதாகவும், அந்த இடத்தில் திருமதி. கோமதி அம்மாள் மற்றும் திரு. ஆதிகேசவன் அவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை திருநெல்வேலி 1வது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.1224/2004இல் 2.3.2011 அன்று வழங்கப்பட்டுள்ளது என்றும், அதற்கு எதிராக திருநெல்வேலி மாவட்ட கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் மேற்முறையீடு செய்யப்பட்ட AS no.42/2011இல் 30.8.2011இல் வழங்கப்பட்ட தீர்ப்பும் மேற்கண்ட தீர்ப்பை உறுதி படுத்தியுள்ளதால், அந்த மின்கம்பிகளை அகற்ற வேண்டும் என்று கூறினார்.

10.3 மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய நிலத்தின் வழியாக இல்லாமல் வேறு வழியில் திருமதி. கோமதி அம்மாளுக்கு மின்சாரம் வழங்க அவருக்கு ஆட்சேபனை இல்லை என்றும் வாதிட்டார்.

10.4 எதிர் மனுதாரர், மின்னிணைப்பு வழங்கியது சரி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால் அந்த மின்னிணைப்பிற்கு செல்லும் தடத்தை மாற்ற வேண்டியது இல்லை என்று வாதிட்டார்.

10.5 மேலும், மேல்முறையீட்டாளர் குறிப்பிடும் அசல் வழக்கு எண்.1224/2004இல் தீர்ப்பில் பொதுவழியில் அதாவது மின் வயர்கள் செல்லும் பாதையில் உறுத்துக்கட்டளை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்பதினால், அந்த மின் கம்பிகளையும், மின்சார வயர்களையும், மாற்றுப்பாதை வழியாக கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய உரிமையை நீதிமன்றத்தில் உறுதி செய்து, மின்கம்பிகளையும், மின்வயர்களையும் அந்த பாதையிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும் என்ற நீதிமன்ற ஆணையை சமர்ப்பித்தால் உரிமம்தாரர் மேற்கொண்டு அந்த மின்கம்பிகளையும், வயர்களையும் அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கையை எடுப்பார் என்றும் தெரிவித்தார்.

10.6 திருமதி. கோமதி அம்மாள் மின்னிணைப்பிற்கு செல்லும் மின்கம்பிகளும், மின்வயர்களும் செல்லும் பாதை (கதவு எண். 80இன் முடுக்கு)இல் உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று மேல்முறையிட்டாளரும் அப்படி உறுத்துக்கட்டளை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்று எதிர்மனுதாரரும் வாதிட்டுள்ளதால் உண்மைநிலையை அறிந்து கொள்வதற்காக திருநெல்வேலி மாவட்ட 1வது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.1224/2004இன் 2.3.2011 நாளிட்ட தீர்ப்புரையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**" DECREE**

1. That the defendants, their men, agents, servants etc., be and are hereby restrained by way of permanent injunction, from interfering with the plaintiff's peaceful possession and enjoyment over the I item of suit schedule property.

2. That the suit be and the same is hereby dismissed for (b) prayer, regarding the second item of suit schedule property .
3. That there be no cost.

*Statement of Cost*

| | | | |
|---|---|---|---|
| x x x x | x x x x | x x x x | x x x |
| x x x x | x x x x | x x x x | x x x |
| x x xx | x x x x | x x x x | x x x |

*1. திருநெல்வேலி ரிஜிஸ்டிரேசன் டிஸ்டிரிக்ட, தபசில் மேற்படி ஜாயிண்ட் 1 நிர் சப்.டி. சரகம், திருநெல்வேலி முனிசிபல் 1வத வார்டு, பேட்டை அன்னதான விநாயகர் கோயில் தெரு வடசிரகில் டவுன் சர்வே வார்டு 3, பிளாக் 14இல், டி.எஸ். 1341 நிர் பாகம் காலிமனை கிழமேல் வடதலை அடி 19 மேற்படி தென்தலை அடி 16 தென்வடல் மேல்தலை அடி 36, மேற்படி கீழ்தலை அடி 36 1/2 உள்ள மனைக்கு செண்டு 11ஆம் இதற்கு எல்லை :*

*வடக்கே : டி.எஸ். 1289 நிர் கிழமேல் தெரு*

*கிழக்கே : டி.எஸ். 1342 நிர் டி.எஸ்.1351 நிர்.டி.எஸ். 1352 நிர் தங்கம்மாள் மனை வீடு பொதுச் சுவர்*

*தெற்கே : டி.எஸ். 1341 நிர் பாகம் என் கைவசமிருக்கிற மனை*

*மேற்கே : டி.எஸ். 1341 நிர் பாகம் இதன் 2 லக்க நடபாதை இதற்குள்பட்டதும் இது பூராவும்.*

*2. மேற்படி வார்டு , மேற்படி பிளாக், மேற்படி தெரு, மேற்படி சிரகில் டி.எஸ்.1341 நிர் பாகம் தென்வடல் நடபாதை மனைக்கு எல்லை :*

*வடக்கே : டி.எஸ். 1289 நிர் கிழமேல் தெரு*

*கிழக்கே : டி.எஸ். 1341 நிர் பாகம் இதன் 1 லக்க காலிமனையும் என் கைவசமுள்ள னை வீடும்*

*தெற்கே : டி.எஸ். 1355 நிர் அன்னதான விநாயகர் கோயில் தெரு*

*மேற்கே : டி.எஸ். 1337 நிர் 1338 நிர் பாகம் பே. சரஸ்வதியம்மாள் மனை விடுகளும் டி.எஸ். 1340 நிர் நாராயண பிள்ளை வகையறா மனை வீடுகளும். இதற்குள்பட்ட மனை கிழமேல் வடதலை அடி 4 1/2 மேற்படி மத்தி அடி 9 மேற்படி தென்தலை அடி 3, தென்வடல் மேல்தலை அடி 148 1/2 மேற்படி கீழ்தலை அடி 151 உள்ள தென்வடல் நடபாதை மனையும் இதில் பிரிவின்றி பேர் பாதியும், தபசில் விபரம் சரி. ”*

10.7 மேலும், இந்த வழக்கின் மேல்முறையீட்டில் திருநெல்வேலி, கூடுதல் சார்பு நீதிமன்றம் மேல்முறையிட்டு வழக்கு மற்றும் குறுக்கு மேல்முறையீட்டு வழக்கு எண். 42/2011இல் 30.8.2011இல் வழங்கிய தீர்ப்பின் சம்பந்தப்பட்ட பத்தி 15 கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

"*15. 2வது அயிட்ட சொத்தைப் பொறுத்தமட்டில் வாதியே மேற்படி 2வது அயிட்ட சொத்தில் தனக்கு பிரிவின்றி ½ பாகம் மட்டும் பாத்தியதை உண்டு என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் மேற்படி பிரிவின்றி ½ பாத்தியதை உள்ள இந்த வாதி தனது கூட்டு உரிமையாளரையும் சேர்த்து பிரதிவாதிகளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கலாம். ஆனால் 2ஆம் பிரதிவாதி தனது சாட்சியத்தில் மேற்படி பாதை வழியாகவே தாங்கள் புழங்கி வருவதாகவும் தாங்களும் அந்தப்பாதையை அனுபவித்து வருவதாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால் வாதிதரப்பு சாட்சிகள் பிரதிவாதிகள் தாவா பாதையை அனுபவிக்கவில்லை என்று குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. வாதி மட்டும் தான் தான் தாவா 2வது அயிட்ட சொத்தை புழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார். அவரது சாட்சியத்தை ருசுப்படுத்த வேறு சாட்சியங்கள், எதையும் நீதிமன்றத்தில் வாதிதரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. ஆனால் பிரதிவாதிகள் தாங்கள் இரண்டாவது அயிட்ட சொத்து பாதையை பல ஆண்டுகாலமாக பயன்படுத்தி வருவதாகவும் பி.வா.சா.2 சாட்சியமளித்துள்ளார். இந்த நிலையில் வசதி , உரிமை அடிப்படையில் 2வது அயிட்ட பாதையை பிரதிவாதி நெடுங்காலமாக பயன்படுத்தி வருவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இரண்டாவது அயிட்ட சொத்தில் முழு உரிமையாளராக இல்லாத இந்த வாதி மற்றொரு உரிமையாளரையும் சேர்த்து இந்தப் பரிகாரத்தை பிரதிவாதிக்கு எதிராக ஏன் கேட்கவில்லை என்பதற்கு முறையான விளக்கம் எதையும் இந்நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை. எனவே 2வது அயிட்ட சொத்தை பொறுத்த மட்டில் ஒரு பொது உரிமையாளராகிய இந்த வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள உறுத்துக் கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று விசாரணை நீதிமன்றம் சரியான முறையிலயே தீர்மானித்துள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. உண்மையில் பிரதிவாதிகள் 2வது அயிட்டச் சொத்தை பயன்படுத்தக்கூடாது என்று இந்த வாதி கருதியிருந்தால் 2வது அயிட்டச் சொத்து வாதிக்கும் மற்றவர் யாருக்கும் பாத்தியப்பட்டது என்பது குறித்து முறையாக தகவல் தெரிவித்த பின்னர் அது குறித்து விளம்புகை பரிகாரம் கோரியும் அல்லது மற்றொரு கூட்டு உரிமையாளரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தானும்*

*இன்னாரும் மட்டுமே தனித்து அந்த 2வது அயிட்ட பாதையை அனுபவித்து வருவதாகவும் சாட்சியமளிக்க வைத்து பிரதிவாதிகளுக்கு எதிராக 2வது அயிட்ட பாதையை அனுபவித்து வருவதாகவும் சாட்சியமளிக்க வைத்து பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கோரியிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாத வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக 2வது அயிட்ட சொத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற தகுதியற்றவர் என்று விசாரணை நீதிமன்றம் முடிவு செய்திருப்பது சரியான ஒன்றே என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்கூறியவற்றின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர்கள் / பிரதிவாதிகளால் வாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கும் எதிர்மேல்முறையீட்டாளர் / வாதியால் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குறுக்கு மேல்முறையீட்டு வழக்கும் அனுமதிக்கத்தக்கதல்ல என்று பிரச்சனை 1 மற்றும் 2ஐ பொறுத்து இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.*

*16 இறுதியில் திருநெல்வேலி 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.1224/2004இல் 2.3.2011ஆம் தேதியன்று பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்பட்டு இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. அவரவர் செலவுத்தொகையை அவரவர் ஏற்கவேண்டும்."*

10.8 மேற்கண்ட தீர்ப்பினை கூர்ந்து படிக்கும்பொழுது எதிர்மனுதாரர் கூறியதுபோல், பாதையில் திருமதி. கோமதியம்மாளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்று தெரிகிறது. மேலும் வசதி, உரிமை அடிப்படையில் 2வது அயிட்ட பாதையையை கோமதி அம்மாள் (பிரதிவாதி) நெடுங்கலமாக பயன்படுத்தி வருவதாக நீதிமன்றம் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10.9 எனவே, திருமதி. சரஸ்வதி அம்மாளுக்கு உரிமையுடைய பாதையில் திருமதி. கோமதி அம்மாளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை உள்ளது என்பது ஏற்புடையதாக இல்லை.

10.10 திருநெல்வேலி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண். 267/2005இல் திருமதி. கோமதியம்மாளுக்கு மின்னிணைப்பு வழங்கியது சரிதான் என்று தீர்ப்புரை வழங்கப்பட்டு அதன் மீது மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்கு எண். AS

68 /2011 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட மின்கம்பிகள் மற்றும் வயர்கள் செல்லும்பாதையில், மேல்முறையீட்டாளர் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை நீதிமன்றத்தால் வழங்கப்படாததாலும் மேற்படி பாதையை கோமதி அம்மாள் வசதி உரிமை அடிப்படையில் நெடுங்காலமாக உபயோகப்படுத்தி வருவதாக நீதிமன்றம் கருதுவதாக மேல்முறையீட்டு மற்றும் குறுக்கு மேல்முறையீட்டு வழக்கு எண். 42/2011க்கு வழங்கிய தீர்ப்புரையில் திருநெல்வேலி கூடுதல் சார்பு நீதிமன்றம் கூறியுள்ளபடியாலும், இந்த வழக்கெழு வினாவிற்கான தீர்வு மேல்முறையீட்டாளருக்கு எதிராக உள்ளது.

11. <u>முடிவுரை :</u>

11.1 பத்தி 9 மற்றும் 10இல் உள்ள வழக்கெழு வினா ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வின்படி இந்த மேல்முறையீட்டாளரின் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

11.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண். 47 / 2012 மின்குறை தீர்ப்பாளரால் இறுதி முடிவு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை என்றும் தெரியப்படுத்தப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1. திருமதி. வி. சரஸ்வதிஅம்மாள்,
க/பெ வீரபாகு செட்டியார்,
எண்.80, மீனாட்சி பவனம்,
அன்னதான விநாயகர் கோயில் தெரு,
பேட்டை, திருநெல்வேலி – 4.

2. மேற்பார்வைப் பொறியாளர்
திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
மகராஜ நகர்,
திருநெல்வேலி – 11.

3. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி வளாகம்
அண்ணாசாலை
சென்னை – 2.

4. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

5. உதவி இயக்குநர் (கணினி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.